விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆனி: 28 துல் ஹஃதா: பிறை: 18 இதழ்: 143

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-07-1990

## பதுங்கு குழி வெட்டியபோது பலாலி 'ஷெல்' விழுந்து நான்கு தொழிலாளர் பலி!

(யாழ்ப்பாணம்)

பதுங்குழி வெட்டச்சென்ற நான்கு தொழிலாளர்கள் குழி வெட்டிக்கொண்டிருந்த இடத்தில் ஷெல் விழுந்து வெடித்துஸ்தலத்திலே பலியானார்கள். அருகில் இருந்த சிலர் படுகாயமடைந்தனர்.

குரும்பசிட்டி சற்பகப் பிள்ளையார் கோவிலடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கூலிக்கு பதுங்குகுழி வெட்டச்சென்ற 4 தொழிலாளிகளே பலியானவர்களாவர்.

மேற்குறிக்கப்பட்ட இடத்தில் ஒருவரின் வளவில் பதுங்குழி வெட்டிக்கொண்டிருந்தவர்கள் களைப்பாறுவதற்காக வெளியே நிழலில் இருந்த சமயம் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் அவர்கள் இளைப்பாறிய இடத்தில் விழுந்து வெடித்தது. அடுத்தடுத்து இரண்டு ஷெல் அதேயிடத்தில் விழுந்ததில் ஓடியவர்களும் சிலர் படுகாயமடைந்தனர். (56)

## வடமராட்சிக் கடலில் நங்கூரமிட்டிருந்த

# போர்க்கப்பல் 'மில்லர்' பாணியில்

## பலகோடி ரூபா ஆயுதம் வெடி மருந்துகளுடன் மூழ்கடிப்பு!

## நூற்றுக்கணக்கான சிப்பாய்களும் பலியாகினர்

[எஸ். சுந்தரலிங்கம்]

**வடமராட்சிக் கடலில் பல வாரங்கள் நங்கூரமிட்டு நின்று, மக்கள் குடிமனைகள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தி வந்த ஸ்ரீலங்கா அரசின் பாரிய யுத்தக் கப்பல் ஒன்றை, படகொன்றில் சென்ற மூன்று கரும் புலிகள் 'மில்லர் பாணி'யில் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தி யுத்தக்கப்பலை மூழ்கடித்துள்ளனர்!**

**இதன் எதிரொலியாக யுத்தக் கப்பலில் இருந்த பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களுடனும், வெடி மருந்துகளுடனும் வடமராட்சிப் பகுதியில் முகாம் அமைக்க வந்திருந்த நூற்றுக்கணக்கான சிப்பாய்களும் கடலில் மூழ்கினர்கள். இத்தாக்குதலை நிறைவேற்றிய மூன்று கரும் புலிகளும் வீரமரணமடைந்தனர்!**

இது பற்றி விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சம்பவ தினம் இரவு, கரும் புலிகளின் வெடிகுண்டுகள் தாங்கிய படகிற்கு நான்கு புலிகளின் படகுகள் பாதுகாப்புக் கொடுக்க, கரும்புலிகளின் கருமைநிறப் படகு ஸ்ரீலங்கா படையின் பாரிய யுத்தக் கப்பலுடன் மோதியதில் கப்பல் தகர்ந்தது.

இத்தாக்குதலில் ஸ்ரீலங்கா யுத்தக் கப்பல் மூழ்கடிக்கப் பட்டதுடன், கரும்புலிகளில் மூவர் வீரமரணம் அடைந்தனர்.

ஏனைய நான்கு புலிகளின் படகுகள் தயாரான நிலையில் இருந்ததால், மீண்டும் தாக்குதலை நடத்த முன்வந்த ஸ்ரீலங்காவின் ஏனைய சிறிய யுத்தக் கப்பல்களை விரட்டி அடித்த பின் திரும்பியுள்ளார்கள்.

கரும்புலிகள் தரப்பில் வீரமரணம் அடைந்தோர் விபரம்: மேஜர் காந்தரூபன் (வல்வை), கப்டன் வினோத்

(4ம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டிபிள்ளையார்கோயில் சேதம்! தேரும் எரிப்பு!

(காங்கேசன்துறை)

மயிலிட்டி கொழுவியங் கலட்டி பிள்ளையார் கோவில் பலாலி முகாம் தாக்குதலால் பெரிதும் சேதமுற்றுள்ளதுடன் ஆலய தேரும் எரிக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பலாலி விமான நிலைய ஓடுபாதைக்கு சமீபமாக உள்ள இவ்வாலயம் அடிக்கடி இடம் பெற்ற ஷெல் தாக்குதல், பொம்மர் தாக்குதல் ஆகியன காரணமாக பெரிதும் சேதமுற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஆலய தேர் முட்டியில் நிறுத்தப்பட்டிருந்த பல லட்ச ரூபா பெறுமதியான தேரும் எரிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்தும் இந்த ஆலய சுற்றுடலில் தாக்குதல்கள் இடம்பெறுவதால் பொது மக்கள் அங்கு செல்ல முடியாமல் உள்ளதாக கூறப்படுகிறது.

மயிலிட்டி கடற்கரை சந்தியில் இருந்து, கட்டுவன் வரையான வீதிக்கு கிழக்கே வசித்த மக்கள் எவரும் தமது வீடுகளை சென்று பார்க்கவோ உடமைகளை எடுக்கவோ முடியாத நிலையில் உள்ளனர், அப்பகுதியில் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளதாக கூறப்படுகிறது. (86)

## யாழ். அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் சகல ஊழியர்களையும் அழைத்து நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஊழியர் கடமை நேரம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திற்கு 80 வீதமான ஊழியர்கள் நேற்று முன்தினம் கடமைக்கு வந்திருந்தனர்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் சகல ஊழியர்களையும் அழைத்து நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஊழியர் கடமைக்கு வருவதில் இருக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தார்.

ஊழியர்கள், குறைந்தது நண்பகல் 2 மணி வரையாவது பிரச்சினை இல்லாத நாட்களில் பணிபுரிய வேண்டுமென்றும் தூரத்திலிருந்து வரும் ஊழியர்கள் குறிப்பாக வல்லை வெளி, சாவகச்சேரி, சுன்னாகம், அராலித்துறை, தீவுப்பகுதி ஆகிய இடங்களுக்கு அப்பால் வசிப்பவர்கள் தமது பகுதியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பணிபுரியுமாறும் பணிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## தபால் ஊழியருக்கு அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகத்தை சேர்ந்த பிரதம தபாலதிப

(4ம் பக்கம் பார்க்க)

## வலி வடக்கில் பராமரிப்பின்றி அழியும் விவசாயப் பயிர்கள்!

(காங்கேசன்துறை)

வலிவடக்கில் ஏராளமான விவசாயப் பயிர் வகைகள் தகுந்த பராமரிப்பு இன்றி கருகி அழியும் அபாயநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலிவடக்கில் மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலை பகுதிகளிலும், பலாலி முகாமை சுற்றியுள்ள மயிலிட்டி, பலாலி, கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிகளிலும் பெருந்தொகையாக செய்கைபண்ணப்பட்ட வெங்காயப் பயிரும் மற்றும் ஏனைய பயிர்வகைகளும் நீர்ப்பாய்ச்சி பராமரிக்க முடியாத நிலையில் கருகி அழிவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி பகுதிகளில் வேற்று நிலங்களிலும் கருகி அழியும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (86)

## உணவுப் பொருளை ஏற்ற பதின்மூன்று லொறிகள் வவுனியா பயணம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டின் கீழ்பதின்மூன்று பல நோக்கு கூட்டுறவுச்சங்க லொறிகள் நேற்று உணவுப் பொருட்களை எடுத்துவருவதற்கு வவுனியா நோக்கிச் சென்றன.

யாழ்ப்பாணம், அச்சுவேலி, புலோலி, தெல்லிப்பழை, பருத்தித்துறை, மானிப்பாய், சுன்னாகம், நல்லூர், நீர்வேலி, பண்டத்தரிப்பு, சாவகச்சேரி ஆகிய பதின்மூன்று கூட்டுறவுச் சங்கலொறிகளே சென்றுள்ளன.

இவை நேற்றுக்காலை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளின் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டன.

## இராணுவதாக்குதல்களினால் சிமெந்து ஆலை சேதம்!

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைப் பகுதியில் கடந்த மாதம் 10ம் திகதி முதல் இடம்பெற்று வரும் தாக்குதல்களால் காங்கேசன் சீமெந்து ஆலைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை திஸ்மே விகாரை முகாமிலிருந்தும் கடற்பகுதியில் இருந்தும் அடிக்கடி ஏவப்படும் ஷெல்கள், பீரங்கிக் குண்டுகள் சீமெந்து ஆலைக்குள் வீழ்ந்து வெடித்து பாரிய சேதத்தை உண்டு பண்ணிவருவதாக கூறப்படுகிறது! (96)

## பண்ணை வீதியில் சென்றவர் சுடப்பட்டு மரணம்!

(வேலணை)

பண்ணை வீதி வழியாகச் சைக்கிளில் சென்ற ஒருவர் கோட்டையிலிருந்து சுடப்பட்டதில் பலியானார்.

சரவணையைச் சேர்ந்த பரநிருபசிங்கம் இரட்னராசசிங்கம் (வயது 38) என்பவரே இவ்வாறு பலியானவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பிலுள்ள
# தமிழ் அகதிகள் விரைவில் யாழ். அனுப்பப்படுவர்

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் தங்கியுள்ள வடபகுதி தமிழ் அகதிகள் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

பம்பலப்பிட்டி, சம்மாங் கோட்டை ஆலயத்திலும், சரஸ்வதி மண்டபத்திலும் தங்கியுள்ள அகதிகளே விரைவில் யாழ்ப்பாணம் அனுப்பப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்னர் இவர்களுக்கு உணவுப்பொருள், பால்மா, மருந்து வகைகள் போன்றவையும் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திருமதி சமந்தா கருணரத்தினு மேற்கொண்டுள்ளார்.

கடந்த வாரம் கல்வி ராஜாங்க அமைச்சரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி ராஜ மனோகரி புலேந்திரனும் புனர்வாழ்வு புனரமைப்பு ராஜாங்க அமைச்சர் திருமதி சமந்தா கருணரத்னவும் அகதிகளைப் பார்வையிட்டார்கள். (து)

## 'வலம்புரி' சேவை

(நெடுந்தீவு)

குறிக்காட்டுவானில் நங்கூரமிடப்பட்டிருக்கும் 'வலம்புரி' பிரயாணிகள் படகை, நயினாதீவு கோவில் பாலத்தில் கொண்டுவந்து கட்டும்படி, நயினாதீவுக் கடற்படையினர் 'குமுதினி' மோட்டார் படகுத் தொழிலாளருக்குப் பணித்துள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து கடந்த பல நாட்களாக 'வலம்புரி' பிரயாணிகள் படகு, தனது சேவையை நடத்தாது குறிக்காட்டுவான் துறையிலேயே நங்கூரமிடப்பட்டுள்ளது. (133)

## விதை வெங்காயம் விநியோகம்

(வட்டுக்கோட்டை)

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் சுமார் 400 கிலோகிராம் விதை வெங்காயத்தை ஏனைய பகுதிகளில் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விற்பனை செய்துள்ளது.

அராலிக் கிராமத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விதை வெங்காயம் இல்லாது இருந்தமையாலேயே இச்சங்கம் தங்கள் வசமிருந்த விதை வெங்காயத்தை விற்பனை செய்து உதவியுள்ளது. (139)

வரவேற்கிறோம்

விற்பனைக்கு

அச்சிடுவதற்கு சிறந்த விக்டோரியா பிளேற்றின் மெஷின், அச்சக எழுத்துக்கள் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகட்கு:- கீர்த்தா அச்சகம், பிரதான வீதி, சங்கானை. (சி-3999)

## சங்கத்திற்கு பாராட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கொத்தணிக்குட்பட்ட பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதச் சம்பள முற்பணமான ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை வங்கிகளிலோ, கடைகளிலோ மாற்றமுடியாது கஷ்டப்பட்ட ஆசிரியர்களது காசோலைகளை ரொக்கப் பணமாக மாற்றிக் கொடுத்த இச் சங்கத்தினரது பெரும் சேவையையே இவர்கள் பாராட்டியுள்ளனர். (139)

## பங்கீட்டு அட்டை விநியோகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் பங்கீட்டு அட்டைகள் இல்லாதவர்களுக்கு அப்பகுதிகளிலுள்ள கிராமசேவையாளர்களினூல் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுவருகின்றன.

உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (101)

## உணவு பொருட்கள் சேகரிப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கிழக்கு அறிவொளி சன சமூக நிலையத்தினர் இடம்பெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்கு உதவும் முகமாக தமது பகுதியில் உணவுப் பொருட்களைச் சேகரித்து வருகின்றனர்.

இச்சேகரிப்பு வேலைகள் முடிவடைந்ததும் சேகரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள் அகதிமுகாம்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

## நாவலர் வீதி கடைகளும் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, கே. கே. ஏஸ். வீதியிலுள்ள சில கடைகளும் பாதுகாப்பு காரணமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏற்கனவே ஸ்ரான்லி வீதியிலுள்ள சில கடைகள் பாதுகாப்பு கருதி வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் மாணிக்கம் கனகராசா

(இளைப்பாறிய லன்ஸ்மன்)

மலர்வு: 3-4-24 உதிர்வு: 12-06-90

ஆறுத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நுணவில் கிழக்கு,
சாவகச்சேரி. (சி-4000)

## பனங்கள் உற்பத்தியைக் குறைத்து
# கருப்பட்டி செய்ய முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பனங்கள் உற்பத்தியைக் குறைத்து பதநீர் உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் கருப்பட்டி, பனஞ்சீனி உற்பத்தியை அதிகரிக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பதநீர் உற்பத்திகாலம், விரைவில் முடிவடையவிருப்பதால் அதற்குள் கூடியளவு பதநீரைப் பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் தற்போது கையிருப்பில் உள்ள பனம் பாணி முழுவதையும் கருப்பட்டி உற்பத்திக்கு பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

சீனி, சர்க்கரை தட்டுப்பாட்டை நீக்க இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வலிகாமத்தில்
# எரிபொருள், தீப்பெட்டி மாவுக்கு தட்டுப்பாடு!

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்குப் பிரிவில் மாவு, தீப்பெட்டி எரிபொருள் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரிவில் உள்ள தனியார் கடைகளில் மாவு, தீப்பெட்டி, மண்ணெய் போன்ற பொருள்கள் எதுவுமே கிடையாது.

ப. நோ. கூ. ச. கிளைகளில் மாத்திரம் சீனி மட்டும் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படுகின்றது.

குழந்தைகளுக்கான பால்மாவுக்கும் இப்பகுதியில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரிவில் மேலதிகமாக வெளியிடங்களில் இருந்து சுமார் 5,000 குடும்பங்கள் வந்து தஞ்சமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (137)

## ஜெர்மன் சமஷ்டிக்குடியரசு 48 லட்சம் ரூபா உதவி

(பேர்ண்)

வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென 48 லட்சம் ரூபாவை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகவே இவ் உதவி வழங்கப்பட்டது. (து)

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்:
# தோல்வியை மறடோனு நிராகரிக்கிறார்!

(ரோம்)

14-வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை, ரோமாபுரியில் நடைபெற்றது. இப் போட்டியில் மே. ஜெர்மன் கோஷ்டியும் - ஆர்ஜன்ரீனாக் கோஷ்டியும் மோதிக் கொண்டன. இதில், இறுதி நேரத்தில் மே. ஜெர்மன் அணி 'பெனல்டி' மூலம் ஒரு கோலப் போட்டு வெற்றி பெற்றது.

இப்போட்டி சம்பிரதாய முறைப்படி கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்ட போட்டி மனப்பான்மை, போட்டி அமைப்பாளர்களுக்கு பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியிருந்ததினால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பெருமளவில் செய்யப்பட்டிருந்தது.

### மஞ்சள் - சிகப்பு காட் எச்சரிக்கை

இந்தப் போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை ஆர்ஜன்ரீனா வீரர்களின் ஆட்டத்தில் சற்று முரட்டுத்தன்மை இருந்ததாகவே கூறப்படுகின்றது. இதனால் இக் கோஷ்டியில் இரு வீரர்களை மத்தியஸ்தர் மஞ்சள் காட்டைக் காட்டி கடுமையாக எச்சரித்தார். ஒரு வீரருக்கு 'சிகப்பு' காட்டை காட்டி மைதானத்தை விட்டே வெளியேற்றினார். இதுபோன்ற நிலை இதுவரை எந்த ஒரு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்திலும் நடைபெற்றதில்லை.

ஆர்ஜன்ரீனாக் கோஷ்டியின் உலகப்புகழ் பெற்ற வீரர் மறடோனுவின் ஆட்டம் இப் போட்டியில் சோபிக்கவில்லை, என்றே கூறப்படுகின்றது. காரணம், இவருக்கு ஆட்ட நேரங்களில் பக்கபலமாக இருக்கும் சிறந்த வீரரான கறிஞ்சா, முன்னைய ஆட்டங்களில் இருமுறை 'மஞ்சள்' காட் தண்டனையைப் பெற்றமையால், இறுதியாட்டத்தில் இவர் பங்கு கொள்ள முடியாதநிலை ஏற்பட்டது.

### 'பெனல்டி' உதை

90 நிமிட ஆட்டத்தில் 85-வது நிமிடத்தில் ஆர்ஜன்ரீனாவுக்கு எதிராக மத்தியஸ்தரால் கொடுக்கப்பட்ட 'பெனல்டி' உதையினாலேயே மே. ஜெர்மன் அணி வெற்றி வகை சூடியது.

இந்த 'பெனல்டி' உதை பற்றி ஆர்ஜன்ரீனா வீரர் மறடோனு கருத்து வெளியிடுகையில், 'எம்மை வேண்டுமென்றே தோல்வி அடைய செய்ய மத்தியஸ்தர் செய்த சதி' எனக் குறிப்பிட்டார்.

வைத்திய நிபுணராக தொழில் பார்க்கும் ஒருவரே இந்த இறுதியாட்டத்துக்கு மத்தியஸ்தராக் கடமையற்றியவர். இப்போட்டியை நேரடியாகப் பார்த்த ஆர்ஜன்ரீனாவின் அரசுத் தலைவர் மத்தியஸ்தர் பற்றி கருத்து தெருவிக்கையில், 'வைத்திய தொழில் பார்க்கும் ஒருவர், உதைபந்தாட்டப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகிக்க வந்தது, மாபெரும் தவறு' எனக்குறிப்பிட்டார்.

'பெனல்டி' உதைபற்றி மே. ஜெர்மனியின் உதைபந்தாட்டப் பயிற்சியாளரும், முன்னாள் உலகப் புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரருமான திரு பெக்கன்மோர் கருத்து தெரிவிக்கையில் 'உரிய நேரத்தில், சரியான தீர்ப்பை வழங்கி மத்தியஸ்தர்களின் 'புனிதத்தை' காப்பாற்றிய மத்தியஸ்தரின் துணிச்சலைப் பாராட்டுகின்றேன்' எனக் கூறினார்.

மே. ஜெர்மன் பெற்ற இந்த வெற்றியை இம்முறை கிழக்கு ஜெர்மன் மக்களும் மிகக்குதூகலமாகக் கொண்டாடிய குறிப்பிடத்தக்கது.

### ரஷ்யாவில் 30 பேர் மரணம்

உதைபந்தாட்டத்தின் இறுதி ஆட்டத்தை தொலைக்காட்சியில் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில், தனது பஸ்ஸை மிகவேகமாக செலுத்திச் சென்ற ரஷ்யா நாட்டு பஸ்சாரதி ஒருவர், ரயில்வே கடவையை கடக்க முற்படும் போது, ரயிலுடன் மோதுண்டதால் பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகளில் 30 பேர் அதே இடத்தில் மாண்டதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## டெனிஸ்:
# வீரர் ஏக்பேட் புதிய சாம்பியன்!

(லண்டன்)

லண்டனில் நடைபெற்ற, 'வெம்பிள்டன்' டெனிஸ் ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் சுவீடனைச் சேர்ந்த வீரர் ஸ்ரீவின் ஏக்பேட் வெற்றி பெற்றார்.

கடந்த இருவருடங்களாக வெம்பிள்டன் டெனிஸில் முடிசூடா மன்னனாக திகழ்ந்த மே. ஜெர்மனியைச் சேர்ந்த மொறிஸ் பேக்கரை 6-2, 6-2, 3-6, 3-6, 6-4 ஆட்டங்களால் ஸ்ரீவின் ஏக்பேட் வெற்றி பெற்று, 1990-ம் ஆண்டு சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டார்.

இவர் இப்போட்டியில் வெற்றி பெற்றிருப்பது இது 2-வது முறையாகும்.

அரைஇறுதியாட்டத்தில், ஸ்ரீவின் ஏக்பேட், உலகின் முதல்தர ஆட்டக்காரரான ஏவான் லெண்டிலை வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

## ரேட்டரிக்கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரி 'இன்ட்ராக்ட்' கழக மாணவர்களை நாளை வியாழக்கிழமை காலை கல்லூரிக்கு சமுகம் தருமாறு யாழ். ரேட்டரி கழகம் கேட்டுள்ளது.

## கீரை விதை இலவசம்

(யாழ்ப்பாணம்)

தமது பசுமைத்திட்டத்தில் கிழ் 'மில்க்வைற்' ஸ்தாபனத்தார் வீட்டுத்தோட்டங்களுக்கெனக் கீரை விதை இலவசமாக வழங்குகிறார்கள். நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

## தீவுப்பகுதியில்
# பதுங்கு குழிகள் அதிகரிப்பு

(புங்குடுதீவு)

தீவுப்பகுதிகளில் இரவோடிரவாக பதுங்கு குழிகள் அமைக்கும் வேலைகள் துரிதமடைந்து வருகிறது.

அப்பகுதிகளிலுள்ளவர்கள் குழுக்களாகச் சேர்ந்து பதுங்கு குழிகளை அமைத்துவருகின்றனர். (101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "குருபகவானுடைய பார்வை பட்டதும் இந்திரனுடையதொல்லைகள்அகன்றன'

பிரம்மதேவரால் சிருஷ்டிக்கப்பட்ட சப்தரிஷிகளில் ஒருவர் ஆங்கிரீசர். அவருடைய மூன்று பிள்ளைகளில் ஒருவர் பிரகஸ்பதி. அவரே வியாழபகவான் என்றழைக்கப்படும் குரு பகவான். சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்த அவர் பல யாகங்களைச் செய்து மிக உன்னதமான நிலையை அடைந்தார். இவருடைய தகுதியை எண்ணி இவருக்குத் தேவகுரு பீடத்தை அளித்தார்கள். இந்திரன் முதலான தேவர்களின் சபையில் குருவாகவும் ஆலோசகராகவும் விளங்கியவர் குருபகவான்.

ஒருசமயம் குருபகவான் முக்கியமான ஒரு விவகாரத்தைக் குறித்துப்பேச இந்திரனுடைய அரண்மனைக்குச் சென்ற அச் சமயம் இந்திரன் தேவமாதர் சூழ்ந்திருக்க அரச சல்லாபத்தில் ஈடுபட்டிருந்தார். குருபகவான் வந்ததை அழ்ந்தும் அறியாததுபோல் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தான். இதைக்கண்ட குருபகவான் அங்கிருந்து திரும்பினர். தம் இல்லத்தை அடைந்த அவர் மாயையால் தன்னை மறைத்துக்கொண்டு விட்டார்.

கேளிக்கை முடிந்து மாதர்கள் சென்றதும் இந்திரன் குருவைத்தேடினான். அவர் இல்லாததைக் கண்டு கலங்கினான், அவர் வந்ததை அறிந்ததும் அறியாததுபோல் நடந்துகொண்ட தவறுக்கு மன்னிப்புக் கேட்கத் தயாரானான். ஆனல் எங்கு தேடியும் குருபகவான் அகப்படவில்லை, குருபகவானைக் காணவில்லையென்றதும், அரக்கர்கள் தேவர்களுடன் சச்சரவு செய்யத் தொடங்கினர். அரக்கர்களின் தொல்லைகளில் இருந்து விடுபட தேவர்களுக்கு ஒரு குரு தேவையாக இருந்தது. குரு பகவானைக் காணுததால் வேறு ஒருவரை தேர்ந்தெடுக்கதொடங்கினர்.

மரீசி முனிவரின் வழித்தோன்றலான துவஸ்டாவின் மைந்தன் விப்ரசித்து இருவரும் சகல சாஸ்திரங்களையும் கலைகளையும் கற்றவர். குருபீடத்துக்கு ஏற்றவர். இவரை தேவர்களின் குருவாக நியமித்தார்கள். குருபதவியை ஏற்றதும் இத்திரனுக்கு விப்ரசித்து நாராயண கவசத்தை உபதேசித்தார். இந்த மந்திரத்தை உச்சரித்துவரும்வரை இந்திரனுக்கு ஒரு தொல்லையும் இருக்காது. அவனை எந்த தீமையும் அண்டாது. ஒருவராலும் தோற்கடிக்கப்படமாட்டாதவனுய் இருந்தான்.

விப்ரசிந்து தேவர்களின் நலனுக்காக எல்லாவற்றை செய்தான். அரக்கர்களின் தொல்லையைப் போக்கினான். அதே சமயம் அவர் அரக்கர்களுக்கும் உதவியும் உபதேசமும் செய்து வந்தார். இதை அறிந்த இந்திரன் அவரை எச்சரிக்கை செய்தான். அவர் செவிசாய்க்கவில்லை. இந்திரன் ஆத்திரமடைந்தான், வஸ்ராயுதத்தால் அவரை அழித்துக்கொன்று விட்டான்.

**வியாழ பகவானது**
**வரலாறு**
**அங்கம் 1**
**ஜோஸ்யர் எழுதுவது**

விப்ரசித்தைக் கொன்றதால் இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஸம் ஏற்பட்டது. விப்ரசித்தின் தந்தை மகன் கொல்லப்பட்டதை அறிந்ததும் தேவர்களையும் இந்திரனையும் அழிக்க ஒரு யாகம் செய்தார். யாகத்திலிருந்து விருத்திராசூரன் என்ற கொடுமைக்குணமும் பயங்கர தோற்றமுள்ள ஒருவன் தோற்றினன். அவன் இத்திரனைப் போருக்கு அழைத்தான். அவனுடன் போரிட முடியாத இந்திரன் தன்னைக் காப்பாற்றும்படி பிரம்மதேவரிடம் சென்றன். அவர் அவனை ஸ்ரீமத் நாராயணனிடம் அழைத்துச்சென்றார்.

இந்திரன் செய்த அடாத காரியம் காரணமாக விருத்திரா சூரனிடமிருந்து தப்ப முடியாது. சூரனைக் கொல்ல வேண்டுமானல் ஒரு மகா தபஸ்வி தன்னுயிரைத்தியாகம் செய்யவேண்டும். அவருடைய முதுகு எலும்பைக்கொண்டு தயாரிக்கும் ஆயுதத்தின் மூலமே சூரனைக் கொல்ல முடியுமென கூறிவிட்டார்.

இந்திரன் பல முனிவர்களை நாடினான். முனிவரொருவரும் இந்திரனுக்கு உதவ முன்வரவில்லை. இந்திரனுடைய நாட்கள் எண்ணப்பட்டு வந்தன. இச்சமயத்தில் ததீச முனிவர் அவருக்கு உதவத் தன் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்தார். அவரது முதுகு எலும்பை எடுத்து ஒரு ஆயுதம் தயாரித்துக்கொண்டு சூரனுடன் சமர் செய்யச் சென்றன். சூரன் கொல்லப்பட்டான். பிரம்மஹத்தி தோஸத்திலிருந்து இந்திரன் விடுபட்டான்

இந்திரன் பட்ட தொல்லைகளே போதும் என்று குருபகவான் மாயையிலிருந்து வெளிவந்து அவனுக்குக் காட்சி தந்தார். குருபகவானின் பார்வை பட்டதுமே இந்திரனுடைய தொல்லைகள் அகன்றன. மீண்டும் குருபகவானையே தேவர்கள் தம் சபைக்குக் குருவாக இருக்குமாறு வேண்டினர்.

குருவின்பார்வை எவ்வளவு முக்கியமானது என்பதற்கு இந்திரன் எல்லா நலனையும் பெற்றதேபோதுமானதாகும். நவக்கிரகங்களில் குருவுக்கு பிரதான இடம் உண்டு. குருவின் 5, 7, 9 பார்வை சகல நன்மையும் தரும். குரு பார்வை பெற்றுல்தான் திருமணம், மக்கட் செல்வம் சிறந்த பதவி. செல்வச்சிறப்பு எல்லாமே அமையும்.

(நாளை தொடரும்)

# தென்னங்குத்தி 50 ரூபா; உரப்பை 15 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் தினமும் ட்ராக்டர்களில் தென்னங்குற்றிகள் விதம்விதமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

6 அடி நீளமான தென்னங்குற்றி ஒன்று 50 ரூபாவாக விற்பனையாகின்றது. ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது 10 தென்னங்குற்றிகளாவது வாங்குகிறார்கள்.

உரப்பைக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. முன்னர் 2 ரூபாவாக விற்கப்பட்ட உரப்பை தற்போது 15 ரூபாவாக அதிகரித்துள்ளது. மக்கள் வெகு தூரம் பிரயாணம் செய்து உரப்பைகளை வாங்க வேண்டியுள்ளது சாக்கு ஒன்றின் விலையும் 10 ரூபா மேலும் கூடியுள்ளது.

## கொக்குவில் இந்துவில் சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியின் சகல விரிவுரையாளர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் இம்மாதம் 13ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# செய்திச்சுருக்கம்

### தேவாலயம் சேதம்

வல் வெட்டித்துறையை நோக்கி பீரங்கி குண்டு தாக்கியதால், ரூமன் கத்தோலிக்க தேவாலயம் சேதமுற்றது. சமரபாகு இலக்ஷ்மணவத்தை இலந்தை காடு பகுதிகள் பாதிக்கப்பட்டன.

### அரச அதிபர் பணிப்புரை

யாழ் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்கு கிராம சேவையாளர்கள் தினமும் சென்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உதவி அரசாங்க அதிபர்களும் அகதி முகாம்களுக்கு செல்லவேண்டும் என்றும் யாழ். அரச அதிபரால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

### அறிவுறுத்தல் கூட்டம்

யாழ் செயலகத்திற்கு ஒரு மாதகாலத்தின்பின் 75 வீதமான ஊழியர் கடமைக்கு வந்திருந்தனர். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பீரட் சகல ஊழியர்களுக்கும், அறிவுறுத்தல் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

### 40,000 பேர் இடம்பெயர்வு

மூதூரில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுற்கு உட்பட்ட சுமார் 40,000 பேர் அகதிகளாக இடம்பெயர்ந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு சென்றுள்ளனர்.

### அகதிகள்இடம்பெயர்வு

பலையில் இதுவரை ஐந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்து சுமார் 4 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்து ஆலயங்களும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளார்கள்.

### நோட்டம்

தீவுப்பகுதியில் தற்போது பொம்மர்களும், அவ்ரோ விமானங்களும், அடிக்கடி சுற்றி வட்டமிட்டு நோட்டம் பார்ப்பதை காணக் கூடியதாக இருக்கிறது. நண்பகல், அதிகாலை, நள்ளிரவு எந்நேரமும் விமானங்கள் நடமாட்டத்தை அவதானிக்கமுடிகிறது. கடற்படை ரோந்து படைகளின் நடமாட்டமும், இப்பகுதியில் அதிகரித்துள்ளது.

### கருச்சில் திருட்டு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியிலுள்ள கருச் ஒன்றில் றேடியோ, பெற்றேல் உட்பட பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளது. கருச் மூடப்பட்டிருந்த போதே திருடர்களால் உடைக்கப்பட்டு இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

### உணவு தட்டுப்பாடு

தீவுப் பகுதியில் உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து சீர்கேடே இதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

### ஹெலி தாக்குதல்

கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தில் செஞ்சிலுவை அடையாளம். போடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் யாழ் நகரில் நடைபெற்ற ஹெலி தாக்குதலின்போது முதியோர் இல்லமும் சேதமடைந்தது தெரிந்ததே.

### மினிபஸ் சேவை

யாழ். குடாநாட்டிற்கான மினிபஸ் சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. சகல மினி பஸ்களும் முத்திரைச் சந்தையிலிருந்தே சேவைகளை தினமும் ஆரம்பிக்கும்.

### ஆஸ்பத்திரி சேதம்

மாங்குளம் இராணுவமுகாமிற்கு மிகவும் சமீபமாகவுள்ள மாங்குளம் வைத்தியசாலை ஷெல் தாக்குதலினுல் சேதமடைந்துள்ளது.

### சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு நகரில் எரிந்த நிலையில் பல சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

### உணவு பொருட்கள்

தீவுப்பகுதி மக்களின் உணவுத்தட்டுப்பாடுகளைப் போக்குவதற்கு யாழ். குடாநாட்டிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுஞ்சியப்படுத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### முஸ்லிம்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் தினமும் தனியார் மினிபஸ்களிலும், லொறிகளிலும்தென்பகுதிநோக்கிச்செல்கின்றனர். இவர்களில் பலர் அனுராதபுரத்தில் தஞ்சமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

### இராணுவம் துன்புறுத்தல்

திருமலையிலிருந்து படகு மூலம் முல்லைத்தீவை நோக்கி வருவோரை இடைவழியில் இராணுவத்தினர் இடைமறித்து துன்புறுத்திவருகிறார்களாம்.

### மடு அகதிகள்

மடுமாதா தேவாலயத்திலும் அதை அண்டிய பகுதிகளிலும் தஞ்சமடைந்திருந்த அகதிகள் பலர் அங்கிருந்து வேறு பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

### நோயாளர் அதிகரிப்பு

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் தொகை தினமும் அதிகரித்து வருகிறது.

### தீவுப்பகுதி இருளில்

தீவுப்பகுதிக்கான மின்சாரம் கடந்த 20 நாட்களாக துண்டிக்கப்பட்டுள்ளது. இதனுல் தீவுப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது. தினமும் கடலிலிருந்து தீவுப்பகுதி நோக்கி பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றுவருகிறது.

### 300 பேர் பலி

திருமலையில் இதுவரை 300 மக்கள் பலியாகியுள்ளதாக திருமலை பகுதி மக்கள் தங்களிடம் தெரிவித்துள்ளதாக ரெலோ பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

### கடற்றொழிலாளர் பாதிப்பு

யாழ். குடாநாட்டின் கடற்கரை பிரதேசங்களில் தொடர்ந்துவரும் பதற்ற நிலைகாரணமாக சுமார் 40,000 கடற்றொழிலாளர்கள் பாதிக்கட்டுள்ளார்கள், இவர்களது தொழில்கள் யாவும் முற்றுகஸ்தம்பிதமடைந்துள்ளது.

### அலுவலகம் தகர்ப்பு

செட்டிகுளத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் அலுவலக கட்டத்தை படையினர் குண்டு வைத்து தகர்த்தனர்.

## இலவச உணவுப்பொருள்:
# அரசாங்க ஊழியருக்கு இனிமேல் கிடைக்காது!

(சித்தன்கேணி)

வெளிமாவட்டங்களிலிருந்தும்குடாநாட்டிலிருந்தும்இடம் இடம்பெயர்ந்துவந்துள்ள அரசாங்க ஊழியர்களின் குடும்பங்களுக்கு தொடர்ந்து இலவச உணவுப்பொருள்பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்துவந்துள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களின் குடும்பங்களுக்கும் யாழ். யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களின்குடும்பங்களுக்கும் தங்கியிருக்கும் பிரிவில் முதலாம் வாரத்துக்கான இலவச உணவுப்பொருள் பெற்றுக்கொள்ளவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

ஆனல் இவர்களுக்கு இரண்டாம் வாரத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என யாழ். அரசாங்க செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

தற்போது கிராமசேவை அலுவலர்களினுல் இடம் பெயர்ந்துவந்துள்ள அரசாங்க ஊழியர்களின் விபரம் திரட்டப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## பொது ஸ்தாபன உதவிகள்
# முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்குகிடைக்கவில்லை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கிழக்கு பிளவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாமில் தற்போது 162 குடும்பங்களைச் சேர்ந்த 565பேர் தங்கியுள்ளனர்.

காரைநகர் தோப்புக்காடு கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்து இந்த முகாமில் தஞ்சமடைந்துள்ள இவர்களை வட்டுக்கோட்டை கிழக்கு சிற்றூரவையினர் கவனித்து வருகின்றனர்.

இந்த முகாமை, செஞ்சிலுவை சங்கத்தினரும் போரூட், ஸ்தாபனத்தினரும் பார்வையிட்டுச் சென்ற போதும் எதுவித உதவிகளும் இதுவரை செய்யவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

பொது ஸ்தாபனங்களின் உதவிகள் கிடைக்காமையால் இங்குள்ள அகதிகள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். (138)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பூரண அரசியல் அதிகாரங்களையுடைய மாநில சுயாட்சித் திட்டத்தை பரிசீலனை செய்யத் தயார்!"

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து பூரண அரசியல் அதிகாரங்களுடைய மாநில சுயாட்சித் திட்டம் ஒன்றைச் சிங்கள அரசு முன் வைக்கு மானால் எமது இயக்கம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் எமது மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதமும், இன ஒழிப்பு நடவடிக்கைகளும் தொடருமானால் தமிழீழத் தனியரசை அமைக்கும் தேவை விடுதலைப் போராட்டத்தைத் தீவிரமாக்குவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சிங்களப் பேரினவாத அரசு இன்று தமிழீழ மக்கள் மீது ஒரு முழு அளவிலான யுத்தத்தினை ஏவிவிட்டு ஒரு இனப் படுகொலையை தீவிரமாக்கி வருகிறது. சிங்கள ஆயுதப் படைகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொலையுண்டு வீடுகின்றனர். பல லட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து அல்லல்படுகின்றனர். ஒரு புறம் எமது மக்களை அழித்துக்கொண்டு, அவர்களைச் சொந்த மண்ணில் இருந்து விரட்டிக்கொண்டு, மறுபுறம் மாகாண சபை என்றும், தேர்தல் என்றும் போலி நம்பிக்கையூட்டி சிங்கள அரசு எமது மக்களையும் உலகத்தையும் ஏமாற்ற முனைகிறது. இந்த அரசியல் சூழ்ச்சி வலையில் நாம் சிக்கிவிடத் தயாராக இல்லை. இன்றைய தமிழின அழிப்பு யுத்தத்தால் எழுந்துள்ள பூதாகரமான பிரச்சினைகளுக்கு மாகாண சபைத்திட்டம் ஒரு தீர்வாக அமையப்போவதில்லை. ஆகவே புதிய திருப்பமடைந்திருக்கும் இன்றைய வரலாற்றுச் சூழ்நிலையில் மாகாண சபை அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது இன்றைய சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலில் பங்குபற்றவும் எமது மக்கள் தயாராக இல்லை.

மாகாணசபைத் திட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே இத்திட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்த்து வந்தது என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

இந்தத் திட்டத்தில் எந்த வகையான உருப்படியான சுயாட்சி அதிகாரங்களும் இல்லை என்பதால் நாம் அதனை அன்றே நிராகரித்து விட்டோம். தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக மாகாணசபைத் திட்டம் அமையவில்லை என்பதுதான் எமது நிலைப்பாடு.

எனவேதான் முன்னைய இந்திய அரசு இத்திட்டத்தை ஆயுதமுனையில் எமது மக்கள் மீது திணிக்க முயன்றபோது நாம் அதனை எதிர்த்தோம். இறுதியில் மாகாணசபை அமைப்பில் இந்திய அரசும் நம்பிக்கையிழந்தது, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் திட்டமாக இது அமையவில்லையென முந்திய ராஜிவ் அரசே ஒப்புக்கொண்டது.

நாம் பிரேமதாசா அரசுடன் பேச்சுக்கள் நடத்தியபோது மாகாணசபை அமைப்பை ஒரு நிரந்தர தீர்வாக ஏற்கவில்லை. இதனை ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பாக ஏற்று தேர்தலை சந்திக்க முடிவெடுத்தோம்.

ஆயினும் மாகாணசபையைக் கலைத்து உடன் தேர்தலை நடத்துமாறு நாம் வற்புறுத்தியதுடன் அரசியல் அமைப்பின் ஆறுவது சட்டத் திருத்தமும் நீக்கப்பட வேண்டுமென முன்நிபந்தனை விதித்தோம்.

ஆனால் அன்று சிங்கள அரசு எமது கோரிக்கைகளை தட்டிக்கழித்து காலம் தாழ்த்தி வந்தது. பேச்சுக்கள் ஒரு வருடத்திற்கு மேலாக இழுபட்டுவந்தன. அன்று நல்லெண்ணமும் சமாதானமும் நிலவியபோது தேர்தலுக்கு சூழ்நிலை சாதகமாக இருக்கவில்லையென பிரேமதாசா நொண்டிச்சாட்டுச் சொல்லி வந்தார். ஆனால் இன்று தமிழீழ மக்களுக்கு எதிராக ஒரு முழு அளவிலான யுத்தத்தை நடத்திக்கொண்டு-எமது மக்களை பெருவாரியாக அழித்துக் கொண்டு - பொருளாதாரத் தடைவிதித்து பஞ்சத்தில் ஆழ்த்திக்கொண்டு - லட்சக் கணக்கானோரை அகதிகளாக மாற்றிக்கொண்டு- தேர்தலுக்குத் தயாரா என சவால் விடுகிறார் பிரேமதாசா.

இன்றைய பயங்கரமான சூழ்நிலை, தேர்தலுக்குச்சாதகமான சுமுக சூழ்நிலை என பிரேமதாசா கருதுவாரானால் தமிழ்பேசும் மக்களின் நலனில் அவருக்கு எத்தகைய அக்கறை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

ஒரு புறத்தில் இன அழிப்பு நடவடிக்கைகளை தீவிரமாக்கிக்கொண்டு, மறுபுறத்தில் மாகாணசபைத் தேர்தல் என்று உலகத்தின் கண்களுக்கு மண்தூவமுனையும் பிரேமதாசாவின் கபடநாடகம் குறித்து சர்வதேசசமூகம் விழிப்பாக இருக்குமென நம்புகிறோம்.

இன்று எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்டுள்ள யுத்தமும், சிங்கள ஆயுதப்படைகளின் கொடூரமான இன ஒழிப்பு நடவடிக்கைகளும் தமிழீழ மக்களுக்கு ஓர் அப்பட்டமான உண்மையை உணர்த்தியிருக்கிறது.

சிங்கள பேரினவாத ஆதிக்கத்தை எமது மக்கள் மீது திணிக்க முயலும் ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு திட்டத்தின் கீழ் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண முடியாது என்பது தான் அது.

நாற்பது ஆண்டுகால கசப்பான வரலாற்று அனுபவமும் இந்த உண்மையை எடுத்தியம்புகிறது.

மாகாண சபைத்திட்டமானது ஸ்ரீ லங்காவின் ஒற்றையாட்சி அரசசமைப்பின் கட்டமைப்பின் கீழ் அமைகிறது. ஆகவேதான் இத்திட்டத்தை நாம் ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்க மறுத்தோம். இன்று புதிதாகப் பிறந்துள்ள பாரதூரமான சூழ்நிலை காரணமாக மாகாணசபைத் திட்டத்தை நாம் ஒரு தற்காலிகத் தீர்வாகவும் ஏற்கத்தயாராக இல்லை.

தமிழீழ மக்களை ஏமாற்றி, தனது வல்லாதிக்கத்தின் கீழ் அடக்கி வைத்திருக்கும் நோக்குடன் சிங்கள அரசு முன்வைக்கும் அரசியல் பொறிகளுக்குள் நாம் ஒரு பொழுதும் சிக்கிவிடப்போவதில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

### வடமராட்சிக் கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(வல்வை), கப்டன் கெலின்ஸ் (மன்னார்).

வீர மரணமடைந்த மூன்று கரும்புலிகளுக்காகத் தமிழ் ஈழம் முழுவதும் சோக கீதங்களைத் தவிர்த்து, இயக்கக் கீதங்களையும், தியாகப் பாடல்களையும் ஒலிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

இதேசமயம், மூழ்கிய கப்பலைத் தேடும் பணியில் நேற்று

# இப்படியும் நடக்கிறது

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் பகுதி. ஒரு கடை. இந்தக் கடையில்தான் 'ஈழநாடு' பத்திரிகையும் விற்பனைசெய்யப்படுகிறது.

காலை வேளை; 'ஈழநாடு' விநியோகப் பகுதியைச் சேர்ந்த இருவர், பத்திரிகை விற்பனை சம்பந்தமான 'பில்'லுடன் அந்தக் கடைக்குள் நுழைகின்றனர்.

"உங்களிடம்தான் முதன்முதலில் (கைவிசேஷமாக) வந்துள்ளோம்..." என்று கூறி 'பில்'லை நீட்டுகின்றனர்.

கடை முதலாளி அகமும் முகமும் மலர... "கொஞ்சம் நில்லுங்க..." என்று கூறிவிட்டு உள்ளே அறையொன்றுக்குள் செல்கிறார். சில நிமிடங்களில் ஒரு சிறிய பார்சலுடன் வெளியே வந்து... "வாசலில் நிற்காமல் கொஞ்சம் உள்ளே வாருங்கள். நல்ல நேரத்தில்தான் வந்திருக்கிறீர்கள், உங்கள் முயற்சி வெல்லவேண்டும், எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்....." என்று வாய் நிறையக் கூறி "தம்பிமாருக்கு இரண்டு டீ போடுங்கோ" என்று பணித்து விட்டு அந்தப் 'பார்சலை' கையளிக்கின்றார் கடை முதலாளி.

நம்மவர், பார்சலை கையில் பெற்று (எல்லாம் சில்லறைப் பணம் போலும் என்று எண்ணி) அதனைப் பிரித்துப் பார்க்கிறார். அவர் உடலில் 'மின்சாரம் பாய்வது போன்ற உணர்ச்சி!

அந்தப் பார்சலில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான கல் அட்டியல் காணப்பட்டது.

"இதென்ன இது..." என்று நம்மவர் கேட்க, "தம்பி... இது என்ர சின்ன மகளுக்காகச் செய்தது. சந்தோஷமாக எடுங்க..." என்று கடைமுதலாளி கூறினார்.

விஷயத்தைப் புரிந்துகொண்ட நம்மவர், "நாங்கள் 'ஈழநாடு' பேப்பரிலிருந்து வருகின்றோம். பேப்பர் காசுக்காகத் தான் 'பில்' தந்தோம்" என்று விளக்கி, கையில் இருந்த பார்சலை முதலாளியிடம் திருப்பி ஒப்படைத்தார்.

வந்தவர்கள்; விடுதலைப் புலிகள் போராட்ட நிதி சேகரிப்பவர்கள் அல்ல என்பது முதலாளிக்குப் பின்னர் தான் தெரிந்தது.

ஊடுருவி-

---

### தபால் ஊழியருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் மற்றும் இத் தபாலகத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு பிரதம தபாலகத்தில் சமுகமளிக்குமாறு வட பிராந்திய தபால்சேவைமாகாணப்பணிப் பாளர் திரு. எஸ். எம். சேது காவலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

---

இரவு வரை ஸ்ரீலங்கா கடற்படையும், ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டிருந்தன.

மேற்படி தேடுதல் வேட்டையில் ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டிருந்ததைக் கரையில் திரண்டிருந்த மக்கள் காணக் கூடியதாக இருந்தது. (51)

### யாழ். அரசாங்க ஊழியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

இதேவேளை யாழ் செயலகத்திலுள்ள அத்தியாவசிய பிரிவுகளான கணக்கு கிளை, சமூக சேவைப்பகுதி, உணவுக்கட்டுப்பாட்டுக்கிளை, ஒய்வூதியக்கிளை ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் கட்டாயம் அப்பிரிவுகளில் பணிபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந் நான்கு பிரிவுகளிலும் பணிபுரியும் தூர இடத்து ஊழியர்களை வாரத்தில் திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் கட்டாயம் சமுகமளிக்குமாறு திரு. சண்முகநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

(71)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

இனவெறி இராணுவத்தின் கொட்டத்தை அடக்க

இளைஞர்களே தமிழர் இராணுவத்தில் சேருங்கள்!

ஸ்ரீலங்கா இராணுவம் என்பது ஏனைய நாடுகளில் இருப்பது போன்று நாட்டின் இனவிகிதாசாரத்துக்கு ஏற்ப தேர்ந்தெடுத்துச் சேர்க்கப்பட்ட தேசிய இராணுவம் அல்ல அது தனிச்சிங்கள இராணுவம்.

சிங்களவர்களினால் சிங்களவர்களைப் பாதுகாக்க என அமைக்கப்பட்ட சிங்களவர்களையே கொண்ட இராணுவம். அந்த இராணுவம் இதுவரை எந்த நாட்டுப் படைகளுடனும் போராடவில்லை. தமிழ்பேசும் மக்கள் மீது தான் பல தடவைகள் தாக்குதக்களை நடத்தியிருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவம்: தமிழ்பேசும் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது. தமிழ்பேசும் பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியிருக்கிறது. தமிழ்பேசும் மக்களில் ஏராளமானோரை அகதிகளாகவும், அனுதைகளாகவும் ஆக்கியிருக்கிறது. தமிழ்பேசும் மக்களின் நிலங்களைச் சிங்களவர்கள் ஆக்கிரமிக்கப் பக்கபலமாகவும் பாதுகாப்பாகவும் இருந்துவருகிறது.

இந்த நடவடிக்கைகளை அதிகப்படுத்தி மேலும் பரவலாக்கி தமிழ்பேசும் இனத்தைப் பூண்டோடு அழிப்பதற்குத்தான் ஸ்ரீலங்கா அரசு புதிதாக இராணுவத்துக்கு ஆட்சேர்க்கிறது; ஆயுதங்களை வாங்குகிறது; மேலதிக செலவினங்களுக்குப் பாராளுமன்றத்தில் ஒப்புதலும் பெற்றிருக்கின்றது.

இளைஞர்களே; இந்நிலையில் சிங்கள இனவெறி இராணுவத்தின் கொட்டத்தை அடக்கத் தமிழரின் அழிவைத் தடுத்து நிறுத்த, தமிழ்பேசும் மக்களின் தேசிய இராணுவமான விடுதலைப்புலிகளின் இராணுவத்தில் உடனடியாக உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்

மத்திய குழு, தமிழீழ விடுதலைப்புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org